ISSN- EN COURS

# எதிர்காலம்

ETHIRKALAM

REVUE TRIMESTRIELLE

இதழ் 9 | சித்திரை-ஆனி | காலாண்டிதழ் | 2001

# பள்ளமடுவில் மீண்டும் வைத்தியசாலை

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையால் வைத்திய வசதி பெறும் மாந்தை மேற்குப் பிரதேச மக்கள்.

மன்னார் மாவட்டத்தின் அடம்பன் பிரதேசத்தில் அமைந்துள்ள பள்ளமடு அரசினர் வைத்தியசாலை கடந்த இடப்பெயர்வின் காரணமாக முற்றாக செயலிழந்து காணப்பட்டது. தற்போது இப்பகுதிகளில் சிறீலங்கா இராணுவம் வெளியேறியுள்ள நிலையில் மேற்படி வைத்தியசாலை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சீரிய முயற்சியின் காரணமாக மீளச் செயற்படத் தொடங்கியுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் கள்ளியடியில் இதற்கான கட்டடம் அமைக்கப்பட்டு கடந்த 12.05.2001 அன்று வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை வைத்தியக் கலாநிதி தர்மலிங்கம் ஏற்றி வைத்தார். வைத்தியசாலைப் பெயர்ப்பலகையினை மாந்தை மேற்கு பிரதேச செயலர் திரைநீக்கம் செய்து வைத்தார். வைத்தியசாலைக் கட்டடத்தினை விடத்தல்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு ஜெயபாலன் அடிகளார் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

கிராமசேவை அலுவலர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பெருமளவிலானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இவ் வைத்தியநிலையம் மீள இயங்கத் தொடங்கியதன் மூலம் மாந்தை மேற்குப் பிராந்தியத்தின் பெருமளவிலான மக்கள் பயனடைவர்.

# முல்லை அபிவிருத்திக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 2,872 கோடி ரூபா ஒதுக்கீடு

முல்லை மாவட்ட அபிவிருத்திக்கு தமிழர் புனர் வாழ்வுக் கழகம் 2,872 கோடி ரூபாவினை ஒதுக்கியுள்ளது. 2001ஆம் ஆண்டில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சிறப்பு வேலைத்திட்டமாக முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்கென இந் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தேவை பகுப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில் அவ்வவ்பகுதி உதவி அரச அதிபர்களினால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகளின் அடிப்படையில் கல்வி, சுகாதாரம், சிறுவர் நலன், வீடமைப்பு, வருவாய் அதிகரிப்பு, மகளிருக்கான அபிவிருத்தி, அவசரகாலப் புனரமைப்பு, புனர்வாழ்வு ஆகிய நடவடிக்கைகளுக்கு இந் நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

இவ் வேலைத்திட்டங்கள் விரைவில் முன்னெடுக்கப்படுவது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் தொடக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

# உறவுகளின் நலன் ஓங்கிட உதவி வழங்கிடுவோம்

சிறீலங்கா அரசாங்கம் எம்மக்களின் வாழ்வைச் சீர்குலைக்க பொருளாதாரத் தடையை கேடயமாகப் பயன்படுத்தி வருவதுடன், யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வரும் எம்மக்களின் மருத்துவ சுகாதார வசதிகளையும் திட்டமிட்டு சீரழித்து வருகின்றது. எம்மக்களுக்குத் தேவையான சாதாரண மருந்துகள் முதல், சத்திரசிகிச்சை வசதிகள் வரை முக்கிய தேவையாக உள்ளன. மக்களின் மருத்துவ சுகாதாரத் தேவைகள் உடன் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

மருத்துவ சுகாதாரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட மக்கள், யுத்தம் காரணமாக சுயதொழில் வாய்ப்பை இழந்ததாலும் போசாக்குக் குறைபாட்டால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் கர்ப்பிணித்தாய்மார், குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள் ஆகியோரது வாழ்வியக்கம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இம் மக்களின் வாழ்வை வளம்பெறச் செய்வதற்காய், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல மக்கள் நல்வாழ்வு மேம்பாட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி வருகின்றது.

இத்திட்டங்களை நிறைவாக நடைமுறைப் படுத்துவதற்கு நிதி வளம் ஒரு பாரிய தடையாக வுள்ளது. இந்நிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களிடம் நிதி சேகரித்து வருகின்றது.

எம்மக்களின் உயிர்களைக் காத்து மருத்துவ சுகாதார வசதிகளை வழங்கி ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முன் வருமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறோம். துயர்துடைப்பு நாட்கள் 2001 யூலை 5 முதல் யூலை 22 வரை நடைமுறைப்படுத்தப்படுவதால் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் மனமுவந்து உறவுகளின் நலன் ஓங்கிட நிதிப் பங்களிப்பு நல்கிட வேண்டுகிறோம்.

**புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களை நாடிவருகிறது. *எதிர்காலம்* எமது மக்களின் எதிர்காலத்திற்கான பாதையைச் செப்பனிடுவது எங்களின் பணியே**

சர்வதேச தொடர்பகம்

**T.R.O,P.O Box 4254**
**Knox City,Vic- 3152**
**Australia**

**Directeur de la Publication**

O.R.T, 26 - rue du Departement, 75018 Paris, France

## தளபாட வசதிகளற்று இயங்கும் சிகிச்சை நிலையம்

கிளிநொச்சி நகரப் பகுதியின் கிளி.சுகாதாரப் பணிமனையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் கர்ப்பவதிகளுக்கான பரிசோதனைகள், சிகிச்சை நிலையத்தின் நிலத்தில் பாயில் வைத்தே மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது.

இது குறித்து சுகாதாரப் பணிமனையினர் தெரிவித்ததாவது. தற்பொழுது பெருமளவு மக்கள் கிளிநொச்சி நகரில் மீளக்குடியமர்ந்து வருவதன் காரணமாக அப்பிரதேச கர்ப்பவதிகளின் நலன்கருதி அங்கு இவர்களுக்கான சிகிச்சை நிலையம் நடாத்தப்பட்டு வருகின்றது. இப்பகுதியில் மக்கள் சிகிச்சையை மேற்கொள்வதற்கான எதுவித வசதிகளும் இல்லை.

கர்ப்பிணித் தாய்மார் தமது ஆரம்பக் கட்டப் பரிசோதனைகளுக்கே அக்கராயன் பொது மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நிலைமை உள்ளது. செல்வா நகர் பகுதியில் அமைந்துள்ள சிகிச்சைநிலையத்திற்கு துணிகளால் மறைப்புக்கள் செய்யப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறீலங்காவின் சுகாதார அமைச்சு இது குறித்து எவ்வித அக்கறையுமற்று இருக்கின்றது. இந்நிலையில் இக்குறையைப் போக்கவேண்டியவர்கள் நாங்களே, சிந்திப்போம் செயலாற்றுவோம்.

## தாக்குதலில் பலியான மீனவரின் குடும்பங்களுக்கு சமாசம் உதவி

சிறீலங்காக் கடற்படையினரின் தாக்குதலினால் பலியான மீனவக் குடும்பங்களுக்கு முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் உதவித் தொகையினை வழங்கியுள்ளது.

முல்லைக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை சிறீலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலினால் பலியான மூன்று மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா 10,000 ரூபா வீதம் தொழில் முயற்சியினை ஊக்குவிக்கும் முகமாக நன்கொடையாக சமாசம் வழங்கியுள்ளதாக அதன் தலைவர் செ.இரத்தினம் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களிலும் இவ்வாறான உதவிகளை முல்லை மாவட்ட கடன் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வழங்கி ஊக்குவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிறீலங்கா அரச படைகள் நடத்துகின்ற தாக்குதல் மூலம் பலியாகின்ற குடும்பங்களுக்கு சிறீலங்கா அரசு இழப்பீடோ உதவியோ வழங்காது இழுத்தடித்து வருகின்ற இக்கால கட்டத்தில் முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மேற்கொண்டுவரும் இம்முயற்சியானது பாராட்டத்தக்கது.

## விசர்நாய்க்கடிக்கான தடுப்பூசி முற்றாக முடிந்தது. நோயாளர் வவுனியாவுக்கு அனுப்பி வைப்பு

விசர்நாய்க்கடிக்கான தடுப்பூசி மருந்து கிளி மாவட்ட வைத்தியசாலையில் முடிவடைந்ததன் காரணமாக விசர்நாய்க்கடிக்குள்ளாகிவரும் நோயாளர்களை வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையில் கிளி மாவட்ட வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்டுள்ளது. மேற்கொண்டு விசர்நாய்த் தடுப்பூசி மருந்தினை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச்

## “வருமுன் காப்போம்”

### புதுக்குடியிருப்பில் சுகாதாரக் கருத்தரங்கு

20.05.01 அன்று புதுக்குடியிருப்பில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது. கிளி/முல்லை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினர் இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தனர்.

கிளி-முல்லை பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி சிவமோகன் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

இச்செயலமர்வில் மனநோயும் உளவியலும் என்ற தலைப்பில் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி ஜெயகுலராஜா, மதுபானம், புகைத்தலால் ஏற்படும் பாதிப்புக்கள் என்ற தலைப்பில் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி சிவபாலன் முதலானோர் உட்பட பல வன்னிவாழ் வைத்திய நிபுணர்கள் பல்வேறு தலைப்புக்களில் கருத்துரை வழங்கினர். இந்நிகழ்வில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## யாழ் குடாநாட்டின் 50 வீத சனத் தொகை இடம்பெயர்ந்துள்ளது

சிறீலங்கா இராணுவம் நிலைகொண்டுள்ள யாழ் குடாநாட்டில் 140,000 மக்கள் இடம்பெயர்ந்து வாழ்வதாக யாழ் செயலக வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. கடந்த வருட அரையாண்டிலிருந்து மட்டும் 40,200 குடும்பங்களைச் சேர்ந்த 141,890 பொதுமக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோராக உள்ளனர். இவர்கள் தற்சமயம் யாழ் குடாநாட்டில் வதியும் மக்கள் தொகையின் 50வீதத்தினராகும்.

யாழ் குடாநாட்டில் மொத்த சனத்தொகையில் 37வீதமானோர் விவசாயத்தையே ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டுள்ளனர். யாழ் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தின் கெடுபிடிகளால் விவசாயிகள் தமது விளைபொருட்களை யாழ் குடாநாட்டில் சந்தைப்படுத்த முடியாதுள்ளது. இது மாத்திரமின்றி பல விவசாயிகள் சிறீலங்கா இராணுவத்தின் போர் நடவடிக்கைகள் மற்றும் கெடுபிடிகள் காரணமாக தமது விளை நிலங்களுக்குச் செல்லமுடியாத நிலையிலுள்ளனர்.

தென்னைவளம் நிறைந்த தென்மராட்சிப் பிரதேசத்தில் தேங்காய்கள் காய்த்துக் குலுங்குகின்றன ஆனால் அப்பகுதிகளுக்கு பொதுமக்கள் எவரையும் செல்வதற்கு சிறீலங்கா இராணுவம் அனுமதிப்பதில்லை.

யாழ் செயலகத் தரவுகளின்படி இடம்பெயர்ந்து வாழ்வோரில் 10,000 குடும்பங்கள் மீன்பிடியை தமது அன்றாட வாழ்விற்குரிய தொழிலாக நடத்துகின்றனர். இவர்களில் 9653 குடும்பங்கள் தற்சமயம் அரசு எப்போதாவது வழங்கும் உலருணவுப் பொருட்களில் வாழ்வினை நடத்துகின்றனர். உலருணவைத் தவிர வேறு வருமானம் எதுவுமே இம் மீனவக்குடும்பங்களுக்குக் கிடையாது.

அதிகாரபூர்வத் தகவல்களின்படி 80,000 வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 24,415 வீடுகள் அடியோடு

# யோகர் சுவாமிகள் திருவடி நிலையம் முதியோர் பராமரிப்பு இல்லம்




1996ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பைப் பொறுத்த வரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. யாழ் குடாநாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ் நிலையின் விளைவாக பெரும்தொகையான மக்கள் யாழ் குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து வன்னிப் பெருநிலப்பரப்பில் பாடசாலைகளிலும், பொதுஇடங் களிலும் நலன்புரி நிலையங்களிலும், மரநிழல் களின் கீழும் தஞ்சமடைந்து வாழும் சூழ்நிலை உருவாகியது.

இம்மக்களின் அடிப்படை அத்தியாவசிய வசதிக ளற்று வாழ்வு நிலைகளும், வாழ்வு இயக்கங்களும் பாதிக்கப்பட்டு வாழ்ந்தபோது, உறவுகளைப் பிரிந்தும் ஆதரவற்றும் இருந்த வயோதிபர்கள் பெரும் பாதிப்பான நிலையிலிருந்தது அவதானிக்கப்பட்டது.

இந்த வயோதிபர்களின் பராமரிப்புத் தேவை இனம் காணப்பட்டபோதும், வன்னிப் பெருநிலப்பரப்பில் முதியோர் பராமரிப்பு இல்லம் ஒன்றுகூட இல்லாத நிலையும் முதியோர் பராமரிப்பு இல்லம் ஒன்று அவசியம் அமைக்கப்படுதல் உணரப்பட்டு 1996ம் ஆண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினதும், சமூகசேவைத் திணைக்களத்தினதும் அனு சரணையுடன் யோகர் சுவாமிகள் திருவடி நிலையம் "முதியோர் பராமரிக்கும் இல்லம்" ஒன்றை அமைக்கும் முயற்சியை ஆரம்பித்தது.

இந்தவகையில் 1996ம் ஆண்டு கிளிநொச்சியில் யோகர் சுவாமிகள் திருவடி நிலையம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், அரச கட்டமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், நலன் விரும்பிகளும் ஒன்றுகூடி ஆராய்ந்து கிளிநொச்சி மாவட்டம் கனகபுரம் பகுதியில் "முதியோர் பராமரிப்பு இல்லம்" அமைப்பது பற்றித் தீர்மானித்து அப்போதைய கிளிநொச்சி அரச அதிபர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் 1996ஆம் ஆண்டு ஆடி மாதம் கிளி நொச்சியில் மேற்கொள்ளப்பட்ட சத்ஜெய இராணுவ நடவடிக் கையின் விளைவாக முதியோர் பராமரிப்பு இல்லம் அமைக் கும் செயற்பாடுகள் இடை நிறுத்தப்பட்டு 1997ம் ஆண்டு மீண்டும் முயற்சி எடுக்கப்பட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத் திட்டத்தில் அமைக்கப்பட்டு 07.07.1997 அன்று கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளம் பகுதியில் ஐயனார்புரக் கிராமத்தில் "யோகர் சுவாமிகள் திருவடி நிலையம்" முதியோர் பராமரிப்பு இல்லத்தை திறந்து வைத்தது.

இத் திறப்பு விழா நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆலோசனையில் முதியோர் பராமரிப்பு இல்லத்திற்கான நிர்வாக சபை தெரிவு செய் யப்பட்டு போசகர்களும் நியமிக்கப்பட்டனர். 25 வயோதிபர்களுக்கு தங்குமிடம், உணவு, உடை, அடிப்படை அத்தியாவசிய வசதியளித்து மருத் துவ சேவை வழங்கும் ஒழுங்குகள் மேற்கொள் ளப்பட்டு முதலாம் ஆண்டு நிறைவில் 50 வயோ திபர்களைப் பராமரிக்கும் சேவையில் நிலையம் நிறைந்து நின்றது. நான்காம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தில் எண்ணிறைந்த பயனாளர்கள் பயன் பெறு கின்றனர். துரத்தும் மூப்பும் துவட்டும் சிறீலங்கா அரசின் தடைகளிலும் துவண்டுவிடாமல் எங்களின் வேர்களைக் காத்திடல் எம் கடனன்றோ, திருவடி நிலையம் மேலும் பல வேர்களின் விருட்சமாக துணை நிற்போம். ■

## பேருந்து தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டன

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறீலங்கா இராணுவம் நிலை கொண்டிருந்த வேளையில் அழிக்கப்பட்ட பேருந்துத் தரிப்பிடங்கள் மீள நிறுவப்பட்டு வருகின்றன. இந்நவடிக்கையில் முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமா சம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒத்தாசையுடன் ஈடுபட்டுள்ளது.

மாத்தளன் முதல் செம்மலை வரைக்குமான கிராமங்களிலேயே பேருந்துத் தரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணியில் சமாசம் ஈடுபட்டுள்ளது. இந்நடவடிக்கை குறித்து மேற்படி சமாசத்தின் தலை வர் செ.இரத்தினம் கருத்துத் தெரிவிக்கையில், மேற்படி கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளில் பேருந்துத் தரிப்பிடங்களை அமைப்பதன் மூலம் மிகவும் பின்தங்கிய நிலையில் அடிப்படை வசதிகள் சிறீலங்கா அரசாங்கத்தால் மறுக்கப்பட்ட நிலையில் வாழும் இப்பிரதேச மக்கள் பெரிதும் பயனடைவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தொடர்ந்தும் சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதேசங்களுக்கு சீமெந்து, இரும்புக் கம்பி முதலான உட்கட்டுமானப் பணிகளுக்கு அத்தியாவசியமான பண்டங்களை மறுப்பதால் முல்லை மாவட்டத்தில் பெருமளவிலான உட்கட்டு மானப் பணிகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

## தருமபுரம் ம.வியில் குடிநீரின்றி மாணவர் அவதி

தருமபுரம் மகாவித்தியாலய மாணவர்கள் குடிநீர் இன்றி அவதிப்படுகின்றனர். கடந்த வருடம் இப்பாடசாலை மீது மேற் கொள்ளப்பட்ட விமானத்தாக்குதல் காரணமாக பாடசாலைக் கிணற்றுச் சுவரில் ஏற்பட்ட வெடிப்பினால் அசுத்த நீர் உட் செல்வதால் குடிநீருக்குப் பாவிக்க முடியாதுள்ளது. அத்தோடு இங்குள்ள குழாய்க்கிணறும் கடந்த ஆறுமாத காலமாக பழுதடைந் துள்ளமையினால், இங்கு கல்வி கற்கும் 1300ற்கும் மேற்பட்ட மாணவர்கள் குடிநீரின்றி அருகிலுள்ள தேனீர்ச்சாலைகளுக்கும் அருகிலுள்ள வீடுகளுக்கும் செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர். இவர்களுக்கு குழாய்க்கிணற்றினைத் திருத்திக் கொடுக்கும் பணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது.


விடுதலை
கானம் பாடி 2001

**தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளை நடாத்தும் விடுதலை கானம் பாடி 2001 சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி**

தொடர்புகட்கு -
**TRO**
**Postfach 401214**
**41182 Monchegladbach**
**Germany**

# சிறுவர்களைப் போசாக்குக் குறைபாட்டிலிருந்து காப்பாற்றும் புனர்வாழ்வுத்திட்டம்

அண்மையில் போசாக்குக் குறைபாட்டால் அதீவிரமாகப் பாதிக்கப்பட்ட மூன்று குழந்தைகள் இனங்காணப்பட்டு புதுக்குடியிருப்பில் உள்ள போசாக்குப் புனர்வாழ்வுப் பூங்காவில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். தொடரும் சிறீலங்கா அரசாங்கத்தின் பொருளாதாரத் தடையினால் வன்னிப் பெருநிலப்பரப்பில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு பலத்த பொருளாதாரத் தடை நிலவுகின்றது. இப் பொருளாதாரத் தடையின் பலத்த தாக்கத்தினால் பெருமளவிலான சிறுவர்களும் குழந்தைகளும் போசாக்குக் குறைபாட்டினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பாதிக்கப்படும் குழந்தைகளையும் சிறுவர்களையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நிர்வகிக்கப்படும் போசாக்குப் பராமரிப்பு நிலையங்களில் இணைத்துவிடுமாறு பெற்றோர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப் போசாக்குப் புனர்வாழ்வுத் திட்டத்தில் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் (**SEDO**) உதவியும் பெறப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் செயற்பாட்டின் கீழ் போசாக்குக் குறைபாட்டால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் இனங்காணப்பட்டு தக்க சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் (SEDO) இணைப்பாளர் திரு. ஜூட் அவர்கள் இது தொடர்பாகத் தெரிவிக்கையில், போசாக்குக் குறைபாட்டால் பாதிக்கப்படுகின்ற குழந்தைகள் அனைத்துமே உள்ளக இடம்பெயர்ந்தோரின் குழந்தைகளே. அடுத்தடுத்து தொடர்ச்சியான இடப்பெயர்வும், விவசாய நிலங்களின் அழிவும், எல்லாவற்றிலும் மேலாக அரசின் தடைகளுமே இக்குழந்தைகளின் அவல நிலைக்குக் காரணமெனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தொடரும் போசாக்குக் குறைபாடு காரணமாக பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரிப்பதால் போசாக்குப் புனர்வாழ்வு மையங்களின் சேவையை விஸ்தரிக்கும் நிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உள்ளது. இதுவே இன்றைய அவசர பணியுமாகும். தளிர்களைக் காத்திட காலம் தாழ்த்தாது எம் கடன் புரிவோம்.

# யாழ் குடாநாட்டில் 1178பேர் செயற்கைக் கால்களுடன்

யாழ் குடாநாட்டில் மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்த 1178 பேருக்கு யாழ் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனத்தாரால் செயற்கைக் கால் உறுப்புக்கள் பொருத்தப்பட்டுள்ளதாக அந்நிறுவனத்தால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ் குடாநாட்டில் கடந்த 14 ஆண்டுகளில் சிறீலங்கா இராணுவத்தினரால் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளில் கால்களை இழந்தவர்களில் 1178 பேர் இதுவரையில் ஜெய்ப்பூர் நிறுவனத்தாரால் பயனடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் யாழ் குடாநாட்டிலேயே வாழ்கின்றனர். இவர்கள் தவிர 105 பொதுமக்கள் சிறீலங்கா இராணுவத்தின் எறிகணைத் தாக்குதல்களால் உடல் உறுப்புக்களை இழந்துள்ளனர் எனவும் அச்செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**துயர் துடைப்பு நாட்கள் 2001**

**யூலை 05 முதல் 22வரை**

**எங்கள் உறவுகளின் துயர்துடைத்திட**
**நாங்கள் திடம் கொள்வோம்**
**உழைப்பின் சிறுதுளியை வழங்கி**
**துயரைப் போக்கிடுவோம்**
**உள்ளங்கள் இரங்கி...**
**கரங்கள் இடும் பங்களிப்பு-**
**எங்கள் உறவுகளின் பசி போக்கும்,**
**நோய் போக்கும்**
**கல்வி கொடுக்கும்**
**நாளைய தூண்களுக்கு**
**வாழ்வளிக்கும்.**

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரான்ஸ்
**O.R.T, 26, rue du Departement,**
**75018 Paris.**
**Tel&Fax- 01 40383074**

Redacteur- P.Palakumaran Imprimerie - Daniel Palaniandy, 3 bis rue du Pont de Baillet, 95560 BAILLET EN FRANCE